முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 03.03.2026 ,அ.வ.எண். 307/2016 வா.சா.2. மயில்சாமி, த/பெ. வேலுச்சாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை கிருஷ்ணசாமி கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஒரு மகன் உள்ளார். கிருஷ்ணசாமி கவுண்டர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது வாரிசு சான்றிதழை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை,. இந்த வழக்கில் கிருஷ்ணசாமி கவுண்டரின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் முன் மூல ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் பட்டா பார்த்துள்ளேன்.

2) அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை பொறுத்து கிருஷ்ணசாமி கவுண்டர் ஆவணங்கள் எழுதிவைத்துள்ளாரா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து புறம்போக்கு நிலம் என்பது தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் 1 ம் பிரதிவாதி எப்போது தாவா சொத்திற்குள் குடியிருப்பதற்காக எந்த வருடம் வந்தார் எத்தனை ஆண்டுகள் அவருக்கு பொறுப்பு ஒப்படைக்கபட்டது என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் அங்கு யாருமே இல்லை.

3) தாவா சொத்தில் தற்போது யார் குடியிருக்கிறார் யார் வரி செலுத்தி வருகிறார் மின் இணைப்பு உள்ளது என்றால் தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்ய வாதிக்கே உரிமையில்லாத நிலையில் அவருக்காக வேண்டி சாட்சியம் அளிக்கின்ற எனது சாட்சியம் ஏற்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

ஒப்பம்/- (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி..

கிருஷ்ணசாமி கவுண்டருக்கு வாதி முத்துவேல் தவிரஉடன் பிறந்த 2 பெண்கள் உள்ளார்கள் என்றால் சரியல்ல. முத்துவேல் மட்டும் தான் ஒரே மகன் ஆவார். முத்துவேலும் நானும் ஒரே ஊர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/- (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.